DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No. 334/2022 | Deposition of Witness for : PW1 |
| Name : சிவபெருமாள் | Father/Husband Name : மணிமுத்து |
| Age : 40 | Village : பெருமாள்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : காய்கறி வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27 May 2025
Accused absent. Petition U/s. 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் பெருமாள்குளத்தில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சம்பவத்தின்போது தெரியும். கடந்த 25.07.2022 ம் தேதி நான் எனது TATA ACE வாகனத்தில் ஏரல் சந்தையில் வியாபாரம் முடித்து சுமார் 11.00 மணியளவில் வெள்ளமடம் தாண்டி முத்துநகர் பக்கம் வந்து கொண்டிருந்தேன். என்னுடன் கிருஷ்ணமூர்த்தி, நவீன், பெருமாள் மற்றும் முத்துலிங்கம் ஆகியோர் என்னுடன் வாகனத்தில் வந்தார்கள்.

2. அப்போது எதிரிகள் அனைவரும் ரோட்டில் எங்கள் வாகனத்தை வழிமறித்து என்னை பார்த்து எந்த ஊர் என்று கேட்டார்கள். நான் பேய்குளம் பக்கம் பெருமாள்குளம் என்று கூறினேன். பெருமாள்குளம் என்றால் நீ சாணாபயதானே என்று பேசி இந்த ஊர் பக்கமாக நீ வண்டியை ஓட்டிக் கொண்டு வரக்கூடாது, வண்டியை விட்டு இறங்கு என்று கூறி தேவடியா மக்களே என்று ஆபாசமாக பேசினார்கள். நான் உடனே வண்டியை விட்டு கீழே இறங்கினேன். அவர்களில் 1 வது எதிரி துரை என்னை கல்லால் என் தலையின் பின்பக்கம் அடித்தார். மற்ற எதிரிகள் அனைவரும் என்னை கீழே தள்ளிவிட்டு விலா எலும்பு மற்றும் இடது காலில் காலால் மிதித்தார்கள். வண்டியின் முன்பக்க கண்ணாடியையும் உடைத்தார்கள். இடது பக்க கார் கதவையும் உடைத்தார்கள். வண்டியில் இருந்த காய்கறி மற்றும் தராசு ஆகிவற்றை கீழே இழுத்து போட்டார்கள். என்னுடன் வந்தவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் அனைவரும் சென்றுவிட்டார்கள். போகும்போது அடுத்தமுறை உன்னை பார்த்துக் கொள்கிறேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். இந்த சம்பவத்தில் என்னுடைய செல்போன் மற்றும் என்னுடன் வந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரின் செல்போனையும் எடுத்து கொண்டு சென்று விட்டார்கள்.

3. வாகனத்திற்கு ஏற்பட்ட செலவு சுமார் 12,000/- இருக்கும். காயம்பட்ட நான் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். அங்கு ஒருநாள் சிகிச்சையில் இருந்தேன். எனக்கு உடம்பு வலியாக இருந்ததால் உடனே காவல்நிலையம் செல்ல முடியவில்லை. பின்பு 27.07.2022 தேதியன்று காவல்நிலையத்தில் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.05.27 17:56:57 +0530

**<u>குறுக்கு விசாரணை இல்லை.</u>**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.05.27 17:57:01 +0530
Judicial Magistrate, Sathankulam.